யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூன் - 2015
# Term Examination, June - 2015

| தமிழ் - I | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2015) |
|---|---|---|

பகுதி - I

01) (i)

(அ) கரிய அடிமரம் கொண்ட வேம்பினது ஒளிமிகுந்த பூவின் புதிய வருவாயானது என்னுடைய தலைவன் இல்லாமல் வீணாக கழிந்து போகுமோ? ஆற்றின் கரையில் வளர்ந்தோங்கிய வெள்ளிய கிளைகளை உடைய அத்தி மர்ததினது ஒரு பழத்தை ஏழு தண்டுகள் பற்றி மிதித்து சிதைத்தது போல வருந்தி நிற்க கொடியவர்களின் நாவானவை காதலர் பிரிந்ததினால் பழிதூற்றி கல்லென்று ஆரவாரம் செய்தன.

(ஆ) இளவேனிற் காலத்தை அறிமுகப்படுத்தி தலைவன் வராமையால் புதுவருவாயும் தலைவியால் நுகர முடியாமற் போயிற்று. பிரிவுத் துன்பத்தால் தலைவி மெலிந்ததோடு ஏழு நண்டுகள் மிதித்த ஒரு பழம்போல கொடியோர் கூறும் பழிச் சொல்லால் மேலும் மெலிந்தாள்.

(இ) முதற்பொருள் :- நிலம் - முல்லை
காலம் - இளவேனில்
கருப்பொருள் :- அத்திப்பழம், நண்டுகள்
உரிப்பொருள் :- இருத்தல்

The National e-learning Portal for The General Education

(ii)

(அ) நபிகள் பெருமான் மழை வேண்டி துஆ பிரார்த்தனை செய்தலும் வானத்தில் மழை பெய்வதற்கு அறிகுறியான மேகம் கருக்கொண்ட சந்தர்ப்பம்.

(ஆ) மழையின்மையால் உண்பதற்கு எதுவுமின்மை
துன்பம் அதிகரித்தமை
மனம் கலங்கியமை
உணவிற்காக தேடி அலைந்தமை

(இ) உவமையணி - மேகம் கருக்கொண்டைமை
வறுமையுற்றோருக்கு புதையல் கிடைத்தமைக்கு ஒப்பிடப்பட்டமை
உருவகம் - இதய பங்கயம், முகிற்கரு

(ஈ) காப்பியத்திற்கான வருணனை
சமயக் காப்பியமாதல் இறைவனின் பெருமை
கதைச் சம்பவம் கூறப்படல்
காப்பியத்திற்கான அணிகள் கையாளப்பட்டமை.

02) (அ)

i) அடிமை வாழ்வு
கூழைப்பிசைந்து வறுமையில் வாழ்தல்
வாழ்விடமின்மை
மாடுபோல உழைத்தல்
வயல்களோடு குறுகிக் கிடத்தல்
உழைப்பின் பயனை அனுபவிக்காமை

ii) காட்டை வெட்டி களமாக்கி கதர்கள் கொட்டும் தலமாக்குதல்
நாட்டைக் காப்பவன்
மக்களை பசியிலிருந்து மீட்பவன்
உலகத்தை இயக்குபவன்

iii) நிலச் சொந்தக்காரரான முதலாளிகள் உழைக்காது சோர்வுற்றிருந்து விவசாயிகளின் உழைப்பினை சுரண்டி வாழ்தல் தொடர்ந்து இடம்பெறுமாயின் விவசாயிகள் அனைவரும் ஒனறுபட்டு கிளர்ந்தெழுவர்.

iv) நிலப்பரப்பு அனைத்தையும் உரிமையாக்கிக் கொள்ளுதல்
விவசாயிகளின் உழைப்பை சுரண்டி வாழ்தல்
நன்றி மறந்தவர்கள்

(ஆ)

i) அவளுக்கென்று சாப்பிட பழைய தட்டம்
குடிக்க தனிக் கிளாஸ்
தரையில் உட்கார்ந்து சாப்பிடுதல்
சமையலறை மூலையில் படுத்தல்
தீண்டத்தகாதவள் போல புதிய விதி அமைக்கப்பட்டது

ii) புதிய விதி அவளது உள்ளத்தில் எதிர்ப்புணர்வை ஊட்டியது.
கிராமத்தில் உயர் சாதியாகிய என்னை தீண்டதகாதவளாக மதித்தமை அவளது மனநிலையை நன்கு பாதித்தது.
வீட்டில் அடிமைத்தனமாக வேலை செய்வதை அவள் மனம் விரும்பாமை
சுதந்திரத்தை இழந்து விட்டது போன்ற உணர்வு

iii) பணத்தால் எவரையும் வாங்கி விடலாம் என்ற நினைப்பு
பசப்பு வார்த்தைகள் பேசி ஏமாற்றுதல்
வேலைக்காரர்களை அடிமை போல பயன்படுத்தல்
ஆசை வார்த்தைகளினூடாக கொடுமைப்படுத்தல்

iv) இருவகையான பேச்சு நடை
இயல்பான யாழ்ப்பான பேச்சு வழக்கு
அதிகாரத்துடன் கூடிய முதலாளித்துவ பேச்சு வழக்கு
தேவைக்கேற்ப சிறிய பெரிய வசனங்கள்
வடமொழி, ஆங்கில மொழி கலப்பும் உள்ளது.

## பகுதி - II

03) (அ) செய்யும் தொழிலை குற்றமில்லாமல் நல்லனவாகச் செய்தல்
1ம் பாடல்

(ஆ) 2ம் பாடல் 6ம் பாடல் வரையுள்ள குறள்களின் தொகுப்பு

(இ) 7ம் பாடல் முதல் 10ம் பாடல் வரை

(ஈ) இக்கால அமைச்சர் வினைத்தூய்மை இல்லாதவராயின் மக்களால் நிராகரிக்கப்படுவர்

04) (அ) வெண்ணெய் அளைந்த மேனியோடு புழுதியில் விளையாடல்
கன்றுகளின் காதில் கட்டெறும்பு பிடித்து விடுதல்
நித்திரை செய்யும் குழந்தையைக் கிள்ளி எழுப்புதல்
கண்ணைப் புரட்டி வெருட்டுதல்
கன்றின் வாலில் ஓலை கட்டுதல்
கனிகள் உதிர எறிதல்
மராமரம் சாய்த்தமை
பூதனை, சகடாசுரன் வதம்

(ஆ) குறும்புச் செயல்களில் மகிழ்தல், பெருமிதம் கொள்ளல்
நீராட ஆயத்தம் செய்வதில் தாய்ப்பாசம்
மாணிக்கமே, கண்மணியே என அழைப்பதில் தாய்மை உணர்வு
குழந்தைக்கு பிடித்தமான உணவு தயாரித்தல்
குழந்தையை கண்டிப்பதிலும் அழைப்பதிலும் காணப்படும் தாய்மை உணர்வு

(இ) கடுமையாக பேசுதல்
காரணம் காட்டிப் பேசி அழைத்தல்
ஆசை காட்டி அழைத்தல்
ஆவலை ஊட்டி அழைத்தல்
மனதை இளகச் செய்து அழைத்தல்

(ஈ) வைஷ்ண பக்தி இலக்கியத்தை வளர்த்தமை
பிள்ளைத் தமிழ் பிரபந்தத்திற்கு முன்னோடியாக இருந்தமை.

05) (அ) தனக்கு நிகரிலாதவன்
முன்னர் தந்த வரங்களை மறுத்து சினம் கொள்வாய்
ஆயின் சத்தியத்திற்கு யாருளர் எனக் கேட்டல்
மரத்தை உவமையாக கூறுதல்
முன்பு கொடுத்த வரத்தை கேளாது விடுக எனக் கூறுவது அறமாமோ எனக் கேட்டல்
வரங்களை தராவிடின் உயிர் விடுவேன் எனக் கூறல்
சிபி சக்கரவர்த்தியை உதாரணம் காட்டிப் பேசல்

(ஆ) பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல் மண்ணே கொள் மற்றது ஒன்று மற
என் மகன் என் கண் என் உயிர்
எல்லா உயிர்கட்கும் நன் மகன் நாடு இறவாமை நய என்றான்.
இராமன் காடு செல்வானாயின் நான் உயிரோடு இருக்க மாட்டேன்
என் மகன் காட்டை ஆள, நான் விண்ணுலகை ஆள்வேன். நீ பழியாகிய கடலைக் கடக்க முடியாமல் வருந்துவாய்

(இ) பெண்கள் கணவர் இறப்பதற்கு முன்னர் தாம் இறந்து விடுவர்
ஆனால் நீ என்னை உயிரோடு கொல்லுகின்றாய்
துன்பத்தை பாராய், குலமகளிர் ஒழுக்கத்தைப் பாராய், தர்மத்தை நினைக்கின்றாய் இல்லை. என் உயிரையும் நாக்கு என்னும் அம்பினால் கொன்றுவிட்டாய்
அச்சம், மடம் போன்ற நற்குணங்களை குல மகளிர்க்குரிய அணிகலன், நீ பெண் இனத்தை சார்ந்தவள் அல்ல.
பழியாகிய கடலை கடக்க முடியாமல் அரசாள்வாய்

(ஈ) தழல் வெம்கண் பேய்தன்னை இரந்தால் தந்து ஈயும்
மரந்தான் எனும் நெஞ்சினன்
இடியேறுண்ட மால்வரை போல் மண்ணிடை வீழ்ந்தான்
கூறுபடுக்கும் கொலைவாளின் ஏறு ஆம் என்னும் வன்துயர்

06) (அ) உலகம் பெரிது தனிமனிதன் அதில் சிறு கூறு
மனித சக்தியை விட இயற்கையின் சக்தி பெரிது
சமுதாய கோளாறுகள் - சாதி மதப் பூசல், அரசியல், மூட நம்பிக்கைகள்
பெரியோர்களின் அறிவுரை உதாசீனம் செய்யப்பட்டமை

(ஆ) பரிபாடல் - யாம் இரப்பவை

பொன்னும் பொருளும் போகமும் அல்ல
அருளும் அன்பும் அறனும் மூன்றும்

திருக்குறள்

ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்
உண்ணாது நோற்பார்

போன்ற குறட்பாக்கள்

(இ) கோபம் கொள்ள மனவலிமை தேவையில்லை - அது வராமல் தடுக்க மனவலிமை வேண்டும்

பொய் சொல்ல மனவலிமை தேவயைில்லை. உண்மை பேச மனவலிமை வேண்டும்.

சூதாட மனவலிமை வேண்டாம். அந்நேரத்தை நல்வழியில் செலுத்த மனவலிமை வேண்டும்.

இது போல பல நியாயங்கள் கூறப்பட வேண்டும்.

(ஈ) எளிமையும் பொருண்மையும் நிறைந்த வெள்ளை நடை

தூய தமிழ் தவிர்க்கமுடியாத இடங்களில் மட்டும் பிறமொழி சொல்லாட்சி

சிறிய தனிவாக்கியப் பயன்பாடு

காரணகாரிய தொடர்புகளால் கருத்துக்களை விளக்கும் நடை

ஆதாரங்கள் காட்டி விளக்குதல்

07) (அ) மகளின் வருங்காலம் சிறக்க வேண்டுமென தாய்படும் கஷ்டங்களை விளக்கி மகளின் உதாசீனத்தை எடுத்துக் காட்டி சந்தர்ப்பங்களுடன் விளக்குதல்.

(ஆ) மூதூர் பிரதேச மொழிநடை

வயது முதிர்வுக்கு ஏற்ற மொழிநடை

கிராமிய பயன்பாட்டில் வரும் உவமை - உ - ம் ராசா ஏறின குதிரை மாதிரி

பழமொழிகள் - உ - ம் நாய்க்கு நடுச் சமுத்திரத்திலும் நக்கு தண்ணிதான்

மரபுச் சொற்றொடர் - கம்புக்குச்சி வெள்ளாமை

பிறமொழி கலந்த பிரதேச வழக்கு - சைக்கிள், ஸ்ரான்ட், கிளீன்

(இ) சைக்கிளில் படிந்த சேறு இக்கதையில் ஒரு குறியீடாக அமைந்துள்ளது. தாய்மீது மகளுக்குள்ள உறவு சைக்கிளில் படிந்த சேறாக சித்தரிக்கப்படுகின்றது.

(ஈ) கிழக்கிலங்கையைக் குறிப்பாக மூதூர் கரையோர மக்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் ஆக்கங்கள்

பிரதேச சித்தரிப்பு, சமூக அவலங்களின் சித்தரிப்பு

ஏற்ற மொழிநடைப் பிரயோகம்

முதலில் எழுதிய சிறுகதை - மழையால் இழந்த காதல்

250க்கு மேற்பட்ட சிறுகதைகள் - கடலின் அக்கரை போனாரே, அவசரம், துணிச்சல்

ஈழகேசரி, வீரகேசரி, தினகரன் பத்திரிகை பிரசுரம்

தோணி - சிறுகதைத் தொகுதி சாகித்திய மண்டலப் பரிசு பெற்றமை

08) (அ) பொங்கி எழுந்தாள் - என்ற தொடரில் இருந்து

நான்கு வரிகள் - அவளது உணர்வு நிலையைச் சித்தரிப்பதாக அமைதல் வேண்டும்.

கைம்மைநோன்பின் கொடுமை பற்றிய துயரம்

துயரத்தோடு பழிச்சொல் ஏற்படுத்திய மன்னவனை பேசுதல்

அறக்கடவுளை தூற்றுதல் - அறன் எனும் மடவோய் விளக்கி எழுதப்படல் வேண்டும்.

(ஆ) இதனை மூன்று வகைகளில் எழுதப்படல் வேண்டும்

i) புறத்தோற்ற அழகு
தேன்தாமற் திருமகன்
மலரின் நொய் அம்சேயி
அன்னப் பார்ப்பு அனான்

ii) அவதார நோக்கம்
கொல்வினை அறுப்ப வந்த குணத்தொகை
ஆரணம் தரும் ஆண்டகை

iii) தெய்வீகக் குணங்கள்
மூன்று காலங்களையும் ஒரே காலம் போல முற்றாக உணர்ந்தவன்
உண்மைப் பொருளை தெளிவிப்பவன்
தேவர்கள் அழைத்துச் சென்றமை
இயற்கை இரங்கியமை

(இ) சாதி வேறுபாடு

உணவு உடை பழக்க வழக்கங்கள்

உயர் சாதி - தாழ்ந்த சாதியினர் வேறுபாடு

வாழ்விடங்கள்

திருமண நடைமுறைகள்

சமூக அடக்குமுறைகள்

தொழில்கள்

வழிபாடுகள்

பொருளாதார வழிமுறைகள்

இவை தொடர்பாக நாவல் குறிப்பிட்ட விடயங்கள் மட்டும் அலசி ஆராயப்பட வேண்டும்

(ஈ) இயற்கையான தொழில் புரிதல்

தொழில் பற்றிய முதலாம் இரண்டாம் கவிதையின் விளக்கங்கள்.

உ - ம் - சூரியன், காற்று, நதி, வானம், மேகம், பனித்துளிகள், சந்திரன் இவற்றின் செயற்பாடுகள் விளக்கப்படல் வேண்டும்.

The National e-learning Portal for The General Education